**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.59/2019 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name : | | **அந்தோனிராஜ்** |
| Father's/Husband Name: | | **ஜோசப்** |
| Village : | | **பெரம்பலூர்** |
| Taluk : | | **பெரம்பலூர்** |
| Age : | | 42/2020 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.11.2020

முதல் விசாரணை

நான் மெடிக்கல் சாப் வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். இந்த கையெழுத்தை நான்சுமார் 3 வருடங்களுக்கு முன்பு கோனேரிபாளையத்திற்கு சென்று கொண்டிருந்தப்போது பைப்பாஸ் அருகே ஆஜர் எதிரியை போலீசார் விசாரித்து கொண்டிருந்த போது அங்கு சென்ற என்னையும் என் நண்பன் மதன்னையும் சாட்சியாக இருக்க கேட்டு கொண்டார்கள். நானும் சம்மதித்து எங்கள் முன்னிலையில் விசாரணை செய்தார்கள் அப்போது எதிரிகள் எங்கள்முன்னிலையில் கணபதி நகரில் ஒரு வீட்டின் பூட்டை உடைத்து அங்கியிருந்த பீரோவை கடப்பாறையால் உடைத்து அதில் இருந்த ரூ.2,40,000 பணத்தை திருடியதாக ஒப்புகொண்டார். மேலும் புது பஸ்ஸ்டாண்ட் அருகேஉள்ள அம்மா உணவகத்தில் அங்கியிருந்த ரூ.400 பணத்தை எடுத்ததாகவும் மேலும் செங்கோள் நகரில் ஒரு வீட்டில் திருட முயற்சி செய்ததாகவும் ஆனால் அங்கு எதுவும் கிடைக்கவில்லை என்று சொன்னதாகவும் அதை போலீசார் எழுதி கொண்டார்கள் அதில் நானும் மதன் என்பவரும் கையெழுத்து செய்தோம். பின்னர் ஆஜர் எதிரி பணத்தை செலவு செய்ததாகவும் மீது உள்ள பணத்தை ரூ.1,00,000 மீதியுள்ளதாக கூறியுள்ளார். அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை மகஜரில் எழுதிகொண்டார்கள் அதில் நானும் மதன் என்பவரும் கையெழுத்து செய்தோம். **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

அ.சா.1 யை எனக்கு தெரியும். புகார் கொடுக்கும் போதுநான் காவல்நிலையத்தில் இருந்தேன் என்றால் சரிதான். ஆத்தூர் ரோடு ரைட் சைடில் போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் ஆத்தூர் ரோடு அருகே எதிரியை போலீசார்

விவாரிச்சார்கள் என்று சொல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். கவிதா பேப்பர் ஸ்டோரில் வேலை செய்த போது ஆஜர் எதிரியை பார்த்து இருந்தேன். போலீசார் விசாரணையில் என்னிடம் வாக்குமூலம் வாங்கும் போது ஆஜர் எதிரி வேலை செய்த இடத்தை சொல்லியுள்ளேன். நானும் மற்றொரு சாட்சி மதன் என்பவரும் நண்பர்கள். பைப்பாஸ் ரோட்டில் காலை 08.00 மணிக்கு கும்பலாக 8 பேர் இருந்தார்கள். பொதுமக்கள் யாரும் இல்லை. போலீசார் சாட்சியாக இருக்க சொன்னாதால் நான் காவல் நிலையத்தில் கையெழுத்து இட்டேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் மற்ற வழக்கிற்கும் என்னை சாட்சியாக அழைப்பார்கள் என்றால் சரியல்ல. பெரம்பலூர் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.1 தெரிந்தவர் என்பதால் அவருக்காக கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை அவரிடம் எந்த வித பொருட்கள் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடம் என்ன கைப்பற்றினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னை மூன்று வழக்கில் தான் சாட்சியாக இருக்க சொன்னார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு என்னை சாட்சியாக போட்ட விவரம் எனக்கு தெரியாது.